
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்



வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் 638 701**

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


1. சவாலை சந்திப்போம் — 1
2. திருமறைதேவனுடைய வார்த்தை என்று நீ என் விசுவாசிக்க வேண்டும் — 5
3. ஆத்தும ஆதாயத்தில் பெண்கள் — 9
4. கிறித்துவம் மேல்நாட்டு மதமா? — 12
5. உதவி செய்யுங்கள் - II — 15
6. வெளிப்படுத்தின விசேஷம் — 19
7. ஒரு முடிவுக்கு வாருங்கள் — 22
8. 5 + 5 = 5 — 24
9. உங்கள் சிறுகுழந்தைகளை சபைக்கு அழைத்து வாருங்கள் — 26

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 7 FEBRUARY 1994 Issue-2


## சவாலை சந்திப்போம்

உரோமைப் பேரரசு முழுவதையும் சிலுவையின் உபதேசத்தால் நிரப்பிச் சாதனைகள் பல புரிந்த அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்திலே இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதிய முதலாம் நிருபத்தில் பல காரியங்களைக் குறித்து ஆலோசனைகளும், அறிவுரைகளும் வழங்கின பிறகு, தான் எபேசு பட்டணத்திலே பெந்தேகோஸ்தே பண்டிகை வரையிலும் தங்கியிருக்க வேண்டிய அவசியத்தைக் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார். இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது. விரோதம் செய்கிறவர்களும் இருக்கிறார்கள். 1 கொரி 16;9. பயன் நிறைந்த பணியாற்ற நல்ல வாய்ப்பு இங்கே இருக்கிறது பகைவரும் பலர் இல்லாமல் இல்லை என்று திருத்திய மொழி பெயர்ப்புக் கூறுகிறது.

இந்த எபேசுப் பட்டணத்தில் ஏற்கனவே அப்போஸ்தலன் பவுல் சற்றேறக்குறைய மூன்று ஆண்டுகள் தங்கியிருந்து பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் பணியாற்றி அநேகரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்திருக்கிறார். அவருடைய அமோக வெற்றி அநேகருடைய எரிச்சலையும், வெறுப்பையும், கோபத்தையும் கிளறிவிட்டு எந்த நிமிடம் அப்போஸ்தலனுடைய உயிருக்கு ஆபத்து நேரிடுமோவென்று அவரை நேசித்தவர்கள் கவலையோடும், ஜாக்கிரதையோடும் தத்தளித்துக் கொண்டிருந்த நேரம். ஆனால் அதைப்பற்றியெல்லாம் ஒன்றும் கண்டுகொள்ளாமல் அஞ்சாநெஞ்சன் பவுல் அங்கே இன்னும் சிலரை கிறிஸ்துவுக்குள் கொண்டுவர வாய்ப்புகள் உண்டா் என்று காத்திருக்க விரும்புகிறார்.

அன்றைய உரோமைப் பேரரசின் முதுகெலும்பு என்று வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்பட்ட ஆசியாவின் தலைநகர்தான் இந்த எபேசுப் பட்டணம். சற்றேறக்குறைய 2,25,000 மக்கள் வாழ்ந்த இந்தப்பட்டணம் ஆயிகண் கடலில் ஆசியா மைனரின் மேற்குக் கரையோரத்தில் அமைந்துள்ள முக்கிய துறைமுகம். ஆசியா மைனரின் முக்கிய நகரங்களின் பெருவழிப் பாதைகளெல்லாம் இப்பெருநகரின் வழியாகவே சென்றபடியால் தரை மார்க்கமாகவும் இப் பட்டணத்துக்கு எளிதில் செல்லலாம். முதல் நூற்றாண்டில் பிரசித்திபெற்ற பட்டணங்களாகக் கருதப்பட்ட எருசலேமுக்கும் உரோமாபுரிக்கும் ஏறத்தாழ சரிபாதியில் இப்பட்டணம் அமைந்திருந்தது இதன் சிறப்புக்கு மேலும் மெருகு ஊட்டியது. மேலும் ஆசியா மைனர் பகுதி வாழ் மக்கள் வணங்கிய தியானாள் என்ற தேவதைக்கு இங்கே பிரசித்தி பெற்ற கோவில் இருந்தது. இந்தக் கோவில் சுமார் 220 ஆண்டுகள் இடைவெளியில் பல்வேறு கட்டங்களில் பலதொழிலாளர்களைக் கொண்டு கட்டியதாகக் கூறப்படுகிறது. முற்றிலும் பளிங்குக் கற்களாலே கட்டப்பட்ட இக்கோவில் ஏழு உலக அதிசயங்களில் ஒன்றாக மதிக்கப்பட்டு வந்தது. இப்படிப் பல காரணங்களாலே எபேசுப் பட்டணம் ஆசியாவின் பெருவணிகநகராகவும் புண்ணிய க்ஷேத்திரமாகவும் ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்தது. அதனால் தான் அப்போஸ்தலனாகிய பவுலும் கூட இப்பட்டணத்தைத் தமது ஊழியத்தின் மையப்பகுதியாகத் தெரிந்துகொண்டாரோ?!

மூன்றுமாதங்கள் யூதருடைய ஜெப ஆலயங்களிலும், இரண்டு ஆண்டுகள் 'திறன்னு' என்பவருடைய கல்விக்கூடத்தைத் தலைமை நிலையமாக வைத்துக்கொண்டு பொதுக் கூட்டங்களில் பிரசங்கித்தும் வீடுவீடாகச் சென்று போதித்தும் எபேசு பட்டணத்தில் மட்டுமல்லாது அதன் சுற்றுப்புறங்களிலும் வாழ்ந்த ஆசிய மக்களில் கொஞ்சங் குறைய எல்லோருடைய மனத்திலும் இடம்பிடித்துக் கொண்டார். அப் 19;26. தியானாளைத் தொழுதுவந்த அநேக பக்தர்கள் சத்தியத்தை அறிந்து கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டபடியால் தியானாளின் செல்வாக்குக் குறைந்து போயின. மந்திரவாதிகள் மாயவித்தைக்காரர்கள் கூட பவுலின் உருக்கமான வல்லமையான போதனைகளில் அடங்கியிருந்த சத்தியத்தால் இழுக்கப்பட்டு தங்களது பிழைப்புக்கு உறுதுணையாக இருந்த சுமார் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசுகள் மதிப்புள்ள சுவடிகளையும், தோற்சுருள்களையும் சுட்டுப்பொசுக்கி தங்கள் உறுதியான விசுவாசத்தையும் முழுமனமாற்றத்தையும் தெரிவித்துக் கொண்டனர். அப் 19;19 அன்றையவரை கிறிஸ்துவின் சுவிசேக்ஷத்தைக் கேள்விப்பட்டிராத சில சீஷர்கள், அப்பொல்லோ போன்ற கல்விமான்கள் தங்களுடைய நிலைகளை மாற்றிக்கொண்டு

சரியான காரணத்திற்காக சரியான முறையில் இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள்.

இப்படிச் சாதனைகள் பல புரிந்து சத்தியத்தை விதைத்த பவுலின் வாழ்க்கை முட்கள் நிறைந்ததும் வேதனைகளும் சோதனைகளும் நிறைந்த ஜீவமரணப் போராட்டமாக இருந்தது என்பதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை. சத்துருவாகிய சாத்தான் தான் அமர்ந்திருக்கும் ஆட்சிப்பீடமே அசைக்கப்பட்டு சாம்ராஜ்யம் சரிந்துபோவதைப் பார்த்துக்கொண்டு அமைதியாக இருப்பானா? தியானாளின் கோவிலைப் போன்று வெள்ளியிலே சிறுசிறு கோவில்களை உண்டு பண்ணி அவைகளை பக்தர்களுக்கு விற்பனை செய்து பெரும்பொருள் சம்பாதித்து வந்த தொழிலாளர் கூட்டம் ஒன்று இருந்தது. அதற்குத் தலைவனாக திமொத்திரியு என்பவன் இருந்தான். தியானாளின் பக்தர்கள் பெரும் அளவில் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டபடியால் சிலை விற்பனை குறைந்து, அந்தத் தொழிலைச் செய்துவந்த தொழிலாளிகளுடைய பிழைப்பு பாதிக்கப்பட்டது. இதைப் பொறுக்கமுடியாத திமொத்திரியு தொழிலாளர்களையெல்லாம் ஒன்று சேர்த்துக்கொண்டு பெரிய கலகத்தை உண்டுபண்ணி பட்டணத்தை இரண்டுமணிநேரம் ஸ்தம்பிக்கச் செய்துவிட்டார்கள். பவுலுக்கு வழித்துணையாகவந்த மக்கதோனியாவாசியான காயு, அரிஸ்தர்க்கு போன்றவர்களையும் அடித்து இம்சித்து அரங்கசாலைக்குள் இழுத்துக்கொண்டு போய் ஆர்ப்பாட்டம் செய்து வெறியாட்டம் ஆடினர். பொதுமக்கள் பீதியடைந்து கூச்சலிட்டுக் கதறினர். ஸ்தல அதிகாரிகள் தலையிட்டு நீண்ட நேரம் போராடி ஒரு வகையாகக் கலவரத்தைக் கட்டுப்படுத்தினர். கலகம் சற்றே ஓய்ந்திருந்ததைப் போலக் காணப்பட்ட போதிலும் பவுலுக்குத் தீமை விளைவிக்க இரகசியமாக ஆலோசனைகள் நடைபெற்ற வண்ணம் இருந்தன.

இச்சம்பவம் அப்போஸ்தலருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பலவிதமான அவஸ்தைகளில் ஒரு சிறிய பகுதியாகும். இதைப் போன்று எண்ணற்ற இன்னல்களைத் தாங்கிக் கொண்டுதான் கிறிஸ்துவின் சிலுவை உபதேசத்தைச் சென்ற இடமெல்லாம் சுமந்து திரிந்தார். தனக்கு நேரிட்ட துன்பங்களைப் பற்றிய விளம்பரத்தை வெறுத்த இத்தியாகசீலன் தவிர்க்க முடியாமலும், மற்றவர்களுடைய விசுவாசத்தை ஊன்றக்கட்டவும் சிற்சில நேரங்களிலே எழுதின சிலவற்றை இங்கே நாம் நினைவு கூறுவது பொருத்தமாக இருக்கும். "எபேசுவிலே துஷ்டமிருகங்களோடே போராடினேன். (1 கொரி 15 :32) என்றும் ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்ரவத்தை நீங்கள் அறியாதிருக்க மனதில்லை. என்னவெனில் பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று' என்று கூறுகிறார். 2 கொ

:8 அது மட்டுமல்ல. கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் தான் பட்டபாடுகளை ஒரு பெரிய பட்டியலே போட்டுக் காட்டியிருக்கிறார். (2 கொரி 11:27)

ஆம் சகோதரனே! முட்களினுடைய உபத்திரவங்களைத் தாங்கிக் கொள்ளாதவன் ரோஜாவின் நறுமணத்தைப் பெறமுடியாது. வேதனைகளைச் சகிக்கவிரும்பாதவன் அல்லது முடியாதவன் சாதனைகள் புரிவதைப் பற்றி சிந்திக்க முடியாது. மெழுகுவர்த்தி தன்னைத்தான் அழித்துக் கொள்ளாமல் இருளை அகற்றி ஒளிதர முடியாது. இது வரலாறு கூறும் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மை. இதற்குக் குறுக்கு வழியே கிடையாது. முதலாம் நூற்றாண்டு இருபதாம் நூற்றாண்டு என்கிற காலவித்தியாசம் கிடையாது. நிறபேதம் கிடையாது. மொழிபாகுபாடு கிடையாது, எல்லைவரம்பு கிடையாது. பிசாசின் பல்வேறு யுக்திகளின் தாக்குதலுக்குப் பயப்படாமல் எதிர்த்துநின்று சவாலை சந்திக்கமுடிந்தாலே உண்மை வெற்றிகிட்டும். "ஆகாயத்திலே சிலம்பம் அடிக்கிற" பாணி ஊழியத்தால் எண்ணிக்கையைக் கூட்டிக் காட்டலாம். தரம் இருக்காது. கிறிஸ்துவின் அன்பின் அகலமும், நீளமும், ஆழமும் உயரமும் இன்னது என்பதை உணர்ந்த உண்மைக் கிறிஸ்தவர்களை உருவாக்கமுடியாது.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் எனதருமைச் சகோதரனே! சகோதரியே! இந்த ஆண்டில் நம்முடைய தீர்மானம் என்ன? தேமாவைப் போல இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசைவைத்து ஓடிப் போகலாமா? அன்றி பிலேயாமைப் போல கூலிக்கு மாரடிக்கப் போகிறோமா? உரோமைப் பட்டணத்தாருக்கு பவுல் எழுதின நிருபம் எட்டாம் அதிகாரம் 35லிருந்து 39 வசனங்கள் வரை ஜெபத்துடன் வாசி. புதியபெலன் கொள்; சவாலை ஏற்றுக் கொள். இப்புதிய ஆண்டு நம் இலட்சியப்பயணத்தின் முதல் மைல்கல்லாக அமையட்டும்

"வழுவாதபடி நம்மைக் காத்து வழி நடத்துகிற தேவன் தாமே நம் எல்லோரையும் ஆசிர்வதித்து முன்னேற்றப் பாதையில் செல்ல ஊக்குவிப்பாராக!

E.Z. செல்வநாயகம்

"திருமறை ஆசான்" இதழின் நிறுவன ஆசிரியர் சகோ E.Z. செல்வநாயகம் அவர்கள், பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து 9-2-94வுடன் ஓர் ஆண்டு நிறைவு பெறுவதால் அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

- ஆசிரியர்.

## ஊழியர்/வாசகர் கருத்து வேண்டும்

திருமறை ஆசானின் காலஞ்சென்ற ஆசிரியர் E.Z செல்வநாயகம் அவர்கள் "ஆசிரியவுரை"யில் முழுக்க முழுக்க சுத்தமான சுவிசேஷத்தை ஆதாரமாக வைத்து எழுதின கருத்தாழமும், சொல் வளமும் நிறைந்த 50 கட்டுரைகளைத் தொகுத்து, சுமார் 300 பக்கங்கள் கொண்ட நூலாக வெளியிடலாமா என யோசித்துக் கொண்டுள்ளேன்.

வெளியிட விரும்பும் நூல், எந்த அளவுக்கு ஆவிக்குரிய வாழ்க்கையில் பிரயோஜனமாக இருக்குமென்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். எழுதி அனுப்புங்கள்.

நன்றி.

ஆசிரியர்

## திருமறை தேவனுடைய வார்த்தை என்று நீ என் விசுவாசிக்க வேண்டும்.

உலகெங்கிலுமுள்ள இலட்சக்கணக்கான மக்கள் "திருமறை" தேவனுடைய வார்த்தையென்று நம்புகின்றனர். அதைப் பற்றி கேள்வி கேட்டுக் கொண்டிருப்பதைக் காட்டிலும், அதை உண்மையென்று ஏற்றுக் கொள்கின்றனர்! மற்றவர்கள், அதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்து, அதின் கனிகளைச் சோதித்துப் பார்க்காததினால் சந்தேகிக்கின்றனர். இன்னும் பலர், திருமறையைப் பற்றி அறியாத சூழலில் பிறந்து, வேறு பல காரியங்களை ஏற்றுக் கொள்ளும்படியாக வளர்க்கப்பட்டபடியால், திருமறையை முற்றிலுமாக ஒதுக்கித் தள்ளி விடுகின்றனர். மேற்சொன்ன கடைசி இரண்டு காரணங்களில் ஒன்றுக்குச் சொந்தக்காரராக நீங்கள் இருப்பீர்களானால், வேதாகமம் தேவனுடைய வார்த்தை தான் என்பதை, சுருக்கமாக உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1. முதலாவது, திருமறை தன்னை "தேவனுடைய வார்த்தை" என்று சொல்கிறது. அது'கர்த்தருடைய வசனம்' என்றழைக்கப்படுகிறது. (எரே 14 :1) அப்போஸ்தலன் பேதுரு கூறும்பொழுது, "தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள், பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" என்று கூறுகிறார். (2 பேதுரு 1 : 20, 21) இயேசுக்கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களில், பழைய ஏற்பாட்டிலிருந்து அநேக மேற்கோள்களைக் காட்டி, அவைகளைக் கர்த்தருடைய வசனம் என்று சொல்கிறார். (யோவா : 10 : 35) இறுதியாக பவுலடியார் சொல்லும்பொழுது, "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்று கூறுகிறார். ( 2 தீமோத் 3 :16, 17)

2. "திருமறை" விஞ்ஞானத்தோடு முற்றிலுமாக ஒத்துப்போகிறது. பூமி உருண்டை வடிவமானது என்றும், சமுத்திரத்தில் வழிகள் உண்டென்று மனிதன் கண்டுபிடிப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன் வேதாகமம் அதைப் பற்றி வெளிப்படுத்தியிருக்கிறது. (ஏசா 40: 22, சங் :8) விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து சில காலத்திற்கு முன்பாக கண்டுபிடிக்கப்பட்ட, இந்த உண்மைகளை பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த வேதாகம எழுத்தாளர்கள் எப்படி அறிந்திருக்க முடியும்? தேவன், அவர்களுக்கு அவைகளை வெளிப்படுத்தினார்.

3. விஞ்ஞானம் மாத்திரம் அல்ல, தொல்பொருள் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளும், வேதாகமத்தை ஆதரித்தே பேசுகிறது. இயேசுக் கிறிஸ்துவுக்குப் பல நூறாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவங்களை, தொல்பொருள் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்துகிறது. நோவா காலத்து ஜலப்பிரளயம் போன்ற சம்பவங்களை சந்தேகப்பட்டவர்கள் இருந்தார்கள். ஆனால் 1872ம் ஆண்டு, ஜார்ஜ் ஸ்மித் என்பவர் கண்டுபிடித்த மரப் பலகைகள் ஜலப்பிரளயத்தை உறுதி செய்கிறது. இன்னும் பல உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

4. திருமறையும், பூகோளமும் ஒத்துப் போகிறது. இன்றைக்கு நாம் காணும் அநேக மலைகள், ஆறுகள், பட்டணங்கள் போன்றவை இதே பெயரால் வேதாகமத்தின் காலத்தில் அழைக்கப்பட்டு, எழுதப்பட்டுள்ளது. ஒருபோதும் இருந்திராத இடங்களைப் பற்றியோ, பட்டணங்கள் பற்றியோ வேதாகமம் போலியாக எழுதி வைக்கவில்லை என்பதை இது நமக்குக் காட்டுகிறது.

5. திருமறையும் உலகச் சரித்திரமும் ஒன்றையொன்று சார்ந்து நிற்கிறது. உதாரணமாக, நடந்த சம்பவங்கள் என்று வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளவைகள், பல உலக சரித்திர நூல்களிலும் இடம்

பெற்றுள்ளது. வேதாகமம் கட்டுக்கதையெனில் இது எப்படிச் சாத்தியமாகும்?

6. "திருமறையை" மனிதனின் அறிவாற்றலை மட்டும் வைத்து எழுதியிருக்க முடியாது. ஏனெனில் இதில் இடம் பெற்றுள்ள அநேக காரியங்கள் மனிதனின் அறிவுக்கு முற்றிலும் அப்பாற்பட்டவை. ஒரு வேளை இதை மனிதன் எழுதி இருந்தால், ஏன் இதைப்போன்ற வேறொன்றை மனிதனால் உருவாக்க முடியவில்லை? மனிதனால் எழுதப்பட்டிருந்தால் இவ்வளவு காலத்திற்கு இதைவிடச் சிறந்த படைப்பை மனிதன் கொண்டு வந்திருக்க முடியுமே.

7. திருமறை ஓர் ஒற்றுமையின் சின்னம். வித்தியாசமான தொழில்களைச் செய்து பல கலாச்சாரங்களைச் சார்ந்த சுமார் 40 ஆசிரியர்கள், சற்றும் சம்பந்தம் இல்லாத காலக்கட்டங்களில் வாழ்ந்து, சுமார் 1600 ஆண்டுகால இடைவெளியில் எழுதியிருந்தாலும் இதில் ஆச்சரியப்படத்தக்க ஒற்றுமையை நாம் காண முடியும். இதில் உள்ள அறுபத்தாறு நூல்களும் ஒன்றையொன்று சார்ந்து ஒரே புத்தகமாகக் காட்சியளிக்கிறது. இந்த வேதாகமம் முழுமையையும் எழுதுவதற்கு தேவன் மாத்திரம் துணையிருந்திருக்காவிட்டால், இது எப்படி சாத்தியமாகும்?

8. திருமறை தீர்க்கதரிசனங்களை மாத்திரம் சொல்லாமல் அவைகள் நிறைவேறின காலங்களையும் சொல்கிறது. உதாரணமாக யோவேல் 2 : 28,29ல் அதன் ஆசிரியர், கர்த்தருடைய ஆவி எப்பொழுது ஊற்றப்படும் என்று எழுதுகிறார். பிறகு புதிய ஏற்பாட்டில் அப் 2ம் அதிகாரத்தில், பேதுரு, யோவேல் தீர்க்கதரிசியின் மூலம் உரைக்கப்பட்டது நிறைவேறியது என்று பேசுகிறார். உலக இரட்சகர் இயேசுக் கிறிஸ்துவைப் பற்றி, பழைய ஏற்பாட்டில் அநேக தீர்க்கதரிசனங்கள் உண்டு. அவையாவும் தவறாமல் புதிய ஏற்பாட்டில் நிறைவேறியுள்ளது. ஏசா 53:5, லூக் : 22:63, 64-ஐப் படிக்கவும்.

9. திருமறை தன்னை, பல சந்தர்ப்பங்களில் தேவனுடைய வார்த்தை என்று நிரூபித்துக் காட்டியுள்ளது. இதற்கு அநேக விரோதிகள் இருந்தார்கள். ஆனால் அவர்கள் எல்லோரையும், திருமறை இருக்கும் இடம் தெரியாமல் செய்துவிட்டது. பன்னெடுங்காலமாக வேதாகமம் பாதுகாக்கப்பட்டுள்ளது. வேதாகமம் இன்றும் "அதே மாதிரி" உள்ளதா என்பதற்கு, இன்றைய மொழி பெயர்ப்பை மூலபாஷையோடு ஒப்பிட்டு பார்த்துக் கொள்ளலாம்.

10. மனிதனின் பல அரிய கேள்விகளுக்கு வேதாகமம் பதில் அளிக்கிறது. மனிதன் எங்கிருந்து வந்தான்? இப்பூவுல வாழ்க்கையில் அவன் நோக்கம் என்ன? அவன் எங்கே

போகிறான்? போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லும் ஒரே நூல் திருமறை தான். மனிதர்கள் தேவனிடமிருந்து வந்தனர் (ஆதி 1"26,27) உண்டாக்கினவரை மகிமைப்படுத்துவதே அவன் நோக்கம் ( 1 பேதுரு 4 : 11) நிச்சயமாக மனிதர்கள் நித்தியத்தை ஏதாவது ஓரிடத்தில் (பரலோகத்திலோ, நரகத்திலோ) கழிக்க வேண்டும் (மத்:25:46) .

11. திருமறை, உலகில் வேறெந்த நூலைக் காட்டிலும், மனுக்குலத்தின் மீது மிகப் பெரிய, சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உலகமானது எவ்வளவு மோசமானதாக இருந்தாலும், தன்னுடைய தனித்தன்மையால் இன்றும் சிறந்த புத்தகமாக விளங்குகிறது.

12. வேதாகமம் ஒரு போதும் ஒழிந்து போகாது. இயேசுக் கிறிஸ்துவே. தான் வாழ்ந்த காலத்தில் இதைப் பற்றிச் சொல்லியுள்ளார். யோவான் 12 : 48.

ஆகவே, திருமறை உண்மையாகவே தேவனுடைய வார்த்தை தான். இது சர்வ வல்ல தேவனிடமிருந்து மனுக்குலத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. பூலோகத்திலிருந்து பரலோகத்திற்குச் செல்ல திருமறை வழிகாட்டுகிறது. இதை விசுவாசியுங்கள். இதன் போதனைக்குக் கீழ்ப்படியுங்கள். இதன் வாக்குத்தத்தங்களால் நீங்கள் ஆசிர்வதிக்கப்படுங்கள். இப்பொழுதிருந்து, நீங்களும், வேதாகமம் தேவனுடைய வார்த்தையென்று நம்புவீர்கள்.

J.C.சோட்.

## ஆண்டவருடைய ஜெபம்

"நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்கிறதுமல்லமால், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும், நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்".

யோவான் 17 : 21

## பெண்கள் பகுதி

# "ஆத்தும ஆதாயத்தில் பெண்கள்"

சபையிலே செய்யப்பட்ட ஊழியம் சம்பந்தப்பட்ட காரியங்களில் பெண்கள் பங்கு பெற்றதற்கான முன் உதார ணங்களை நாம் வேத வசனங்களில் தேட முற்பட்டால், பிலிப்பு பட்டணத்தில் இருந்த சபைக்கு, பவுல் எழுதின வசனம் நம் கண்ணுக்குப் புலப்படும். "கர்த்தருக்குள் ஒரே சிந்தை யாயிருக்க எயோதியாளுக்கும், சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்லுகிறேன். என் உத்தம கூட்டாளியே . . . . . அவர்கள் கிலேமெந்தோடும், மற்ற என் உடன் வேலையாட்களோடு கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடு கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள் . . . (பிலி 4:2,3) மற்றும் ரோமாபுரியாருக்கு நிருபம் எழுதும்போது தன்னோடு கூடப் பாடுபட்ட அநேக பெண்களை பவுல் குறிப் பிடுகிறார். "எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்" (வசனம் :6) கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும், ஆக்கில்லா வையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள் . . . அவர்கள் வீட்டிலே கூடி வருகிற சபையையும் வாழ்த்துங்கள் (வசனம் 3 -5)

இந்த ஜோடியை நாம் முதன் முதலாக அப்போஸ்தலர் 18:2, 3 ஆகிய வசனங்களில் காணலாம். பவுல் தனது இரண்டாம் சுவிசேஷப் பயணத்தில் அத்தேனே பட்டணத்தை விட்டு கொரிந்து பட்டணத்திற்கு வந்த போது . . . . இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்து தேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவி யாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு அவர்களிடத் திற்குப் போனான். அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளி களாயிருந்தார்கள். தானும் அந்தத் தொழில் செய்கிறவனான படியினாலே அப்போஸ் தலனாகிய பவுல் அவர்களோடே தங்கி வேலை செய்து கொண்டு வந்தான்.

ஆக்கில்லா, பிரிஸ்கில்லா தம்பதி ஏற்கனவே கிறிஸ்தவர் களாயிருந்தார்களென்றோ, பவுலோடு கொரிந்துவில் ஏற்பட்ட பழக்கத்தால் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டார்களென்றோ

வசனம் நமக்கு சொல்லவில்லை. ஆனால் அவர்கள் ஆரம்ப கால சபையில் ஒரு முக்கியப் பங்கை வகித்தனர் என்பது மட்டும் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது.

அப் : 18 :24ம் வசனம், எபேசு பட்டணத்திற்கு வந்த "அப்பொல்லோ" என்ற பெயருடைய ஒரு மனிதனை நமக்கு அறிமுகப்படுத்துகிறது அவன் சாதுரியவான், வேதாகமங்களில் வல்லவன் . . . அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாயப் போதகம் பண்ணிக் கொண்டு வந்தான்.

ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் எபேசுவிலே வாழ்ந்து கொண்டு வந்தார்கள். அப் 18:26 "அப்பொல்லோ ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பேசத் தொடங்கினான்" என்று சொல்கிறது. ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். பொதுவான இடங்களில் ஆண்கள்தான் பேச வேண்டுமென்றிருந்தாலும், ஒரு கிறிஸ்தவப் பெண் தனிப்பட்ட முறையில் போதிக்கலாம். "இருவரும்" . . . . . . ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய தெளிவான உண்மையை அப்பொல்லோ தெரிந்து கொள்வதற்கு உதவி செய்தார்கள்.

கிறிஸ்தவப் பெண்கள் வேத வசனங்களைப் படித்து, மற்றவர்களுக்குப் போதிக்கும் திறமையை வளர்த்துக் கொள்வது, இன்றைய நாளின் முக்கிய தேவைகளில் ஒன்று. உலக ஜனத்தொகையை எடுத்துக் கொண்டால் அதில் பெண்கள், இளம் பிள்ளைகள், குழந்தைகள் ஆகியோர் தான் பெரும்பாலானவர்கள் வேத வசனங்களை சிறப்பாகப் படித்துத் தேறும் பெண்கள், தன்னுடைய தோழிகள், தன்னுடன் பழகும் அயலகத்தார். உறவினர் என அநேகருக்கு நற்செய்தியை அறிவிக்கும் பல வாய்ப்புகளைப் பெற்று கொள்ள முடியும். தன்னுடைய வீட்டிற்கு தனிமையாகவோ அல்லது குழுவாகவோ மற்றவர்களை அழைத்து, குறைந்தது வாரத்திற்கு ஒரு முறையாகிலும் அழைத்து, அவர்களோடு சேர்ந்து தேநீர் அருந்தி மகிழ்ந்து பிறகு தேவனுடைய வார்த்தையைப் படிக்கலாம்.

கணவனும், மனைவியுமாகச் சேர்ந்து நண்பர்கள் மற்றும் அறிமுகமானவர்களுடைய வீடுகளைச் சந்திக்கச் சென்று அவர்களோடு சேர்ந்து சத்தியத்தைக் கற்கலாம். ஒரு வாரத்திற்கு இரண்டு அல்லது

மூன்று மாலை வேலைகளை இதற்காக ஒதுக்கலாம்.

ஒரு கிறிஸ்தவப் பெண் அக்கம்பக்கத்திலுள்ள சின்னஞ் சிறார்களை வாரம் ஒருமுறை தன் வீட்டிற்கு வேத வகுப்பிற்கு வரும்படி உற்சாகப்படுத்தவும் வாய்ப்புண்டு. அவர்களுக்குப் பாடல்கள், மனப்பாட வசனங்கள், வேதாகமத்திலுள்ள சம்பவங் களை குட்டிக் கதைகளாகச் சொல்லிக் கொடுக்க முடியும். அவர்கள் அப்படி வளர்ந்து வரும் நாட்களில் அவர்களோடு சேர்ந்து பெற்றோர் களும், சுவிசேஷத் திற்குக் கீழ்ப் படிந்து சபையில் அங்கம் வகிக்க வாய்ப்புண்டு. விசுவாசத்தில் பலமாக உள்ள ஒரு பெண், தன்னுடைய அயலகத்தில், இப்படிப்பட்டதான ஊழியங் களின் மூலம் ஒரு பெரிய தாக்கத்தை உண்டு பண்ண முடியும்.

பொதுவான இடங்களில் தலைமையேற்று நடத்தும் பொறுப்பு ஆண்களுக்கு இருந் தாலும், மற்றவர்கள் பின்பற்றக் கூடிய கிறிஸ்தவ ஒழுக்க வாழ்வு, பெண்கள் மத்தியில் தலைமை யேற்று அவர்களை வழிநடத்தும் கிறிஸ்தவப் பெண்கள் இல்லா விட்டால் சபைகள் உண்மையான பலம் பொருந்தினதாக இருக்க முடியாது. மெய்க்கிறிஸ்தவ வாழ்வை ஏற்றுக்கொண்ட பெண் களாகிய நாம் ஒவ்வொருவரும் ஜெபித்து, அதற்கேற்ற வேலைகள் செய்து பெண்கள் மத்தியில் நமது தலைமைப் பண்பை வளர்த்துக் கொள்ள பாடுபட்டு, அதன் மூலம் ஆத்தும ஆதாயம் செய்வோம்.

BETTY CHOATE

RACHEL NAYAGAM

## கிறிஸ்தவர்களே, பிரிவினை வேண்டாம்

சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.

ஏனெனில், என் சகோதரரே உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது.

I கொரிந்தியர் 1:10,11.

# கிறிஸ்தவம் மேல் நாட்டு மதமா?

மிகப் பெரிய போராட்டங்களையும், பயங்கர எதிர்ப்புகளையும் மேற்கொண்ட கிறிஸ்தவ மார்க்கம், இன்றும் இவைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. காரணமற்ற காழ்ப்புணர்ச்சி இதன் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. சத்தியமற்ற சதித் திட்டங்கள் இதற்கு எதிராக உருவாக்கப்படுகின்றன. இவைகள் அனைத்தும் அறிவு பூர்வமற்ற நம்பிக்கைகளும், ஆதாரமற்ற குற்றசாட்டுகளுமே அடிகோலு கின்றன. "மத மாற்றத்தைத் தடை செய்" என்ற அலறல் ஒரு புறம். "மதச் சார்பற்ற நாடு" என்ற கொள்கை காற்றிலே பறக்க விடப்பட்டு, 'குறிப்பிட்ட மதத்திற்கே நாடு சொந்தம்" என்ற கூக்குரல் மறுபுறம்.

மேற்குறிப்பிட்ட பிரச்னைக்குக் காரணம் "கிறிஸ்தவம் ஒரு மேலை நாட்டு மதம்" என்றும், "அது" இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டதாகவும் கருதுகின்றனர். ஆதலால் "அந்நிய நாட்டு மதத்தை" நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும் கூறுகின்றனர். ஆனால் இவர்களின் கூற்றுப்படி கிறிஸ்தவம் நிச்சயமாக ஒரு அந்நியநாட்டு மதமல்ல. கிறிஸ்து ஒரு ஏழை தச்சனுடைய குடும்பத்திலே பிறந்து, வளர்ந்து தாம் தெய்வத்தினிடத்திலிருந்து வந்த தேவகுமாரன் என்பதை விளங்கப் பண்ணினார். அவரது பிறப்பிற்கு முன் தேவ தூதனால் முன் அறிவிக்கப்பட்டபடியே (இம்மானுவேல்) தேவன் நம்மோடிருந்தார். (மத். 1:23) இவர் தேவனுடைய தற்சுரூபமும், பரிசுத்த முள்ளவருமாய் வாசம் பண்ணினார், குருடர்கள் பார்த்தனர், செவிடர்கள் கேட்டனர். ஊமையர்கள் பேசினர். முடவர்களை நடக்கச் செய்தார். இறந்து போனவர்களை உயிரோடு எழுப்பினார். இந்த வல்லமையுள்ள கிறிஸ்து சிலுவையில் தாமே மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அவர் மரித்தார் என்பதையும், உயிரோடு எழுந்தார் என்பதையும் சிறிதும் மறுப்பின்றி வரலாற்றுப் பின்னணிகள் ஏற்றுக் கொள்கின்றன.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து, அந்நிய நாட்டிற்கு மட்டுமோ அல்லது ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்கு மட்டுமோ உரிய ஒரு 'மதத்தை' ஸ்தாபிக்கவில்லை. அவர் பரமேறிச் செல்வதற்கு முன் தமது சீஷர்களிடம் கூறும்போது, "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் (சகல நாட்டவரையும்) சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ

உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார், ஆமென்'' (மத்தேயு 28:18-20) இதிலிருந்து சகல நாட்டவரும் கிறிஸ்துவின் சீஷராக வேண்டுமென அவர் விரும்பியதை நாம் அறிகிறோம். மேலும் அவர் தேவனுடைய குமாரன் என்பதையும், அவர் மரித்து உயிர்த்தெழுந்தார் என்பதையும் கண் கண்ட சாட்சியாக அறிவிக்கும்படி சொல்லும்போது, ''........ பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பலனடைந்து எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தம் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்'' என்று கூறினார். (அப்போஸ்தலர் 1:8) மேலும் லூக்கா என்ற வைத்தியர் மூலம் எழுதப்பட்டதில், ''எழுதியிருக்கிறபடி (பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டபடி) கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்திலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது என்றார்'' (லூக்கா254:46-57)

எனவே பூமியிலுள்ள கடைசி குக்கிராமம் வரைக்கும் அனைத்து மக்களுக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டியதும், அனைத்து மக்களும் சீஷராக்கப்பட வேண்டியதுமே கிறிஸ்தவம்.

இரண்டாவதாக, கிறிஸ்தவம் ''ஒரு மதமல்ல''. ''மதம்'' என்பது கண்மூடி பழக்கங்களை கொண்டது. மூடநம்பிக்கைகளை கொண்டது; மனப்பிரமைகளையும், உணர்வுகளையும் அடிப்படையாகக் கொண்டது; சடங்காச்சாரங்களையும், பாரம்பரியங்களையும் தன்னகத்தே கொண்டது; கிறிஸ்தவத்தில் இதற்கு இடமில்லை. உண்மை கிறிஸ்தவத்தை விட்டு வழுவிப் போனோரிடம் இவைகள் இருந்தாலும் உண்மைக் கிறிஸ்தவத்தில் இவைகள் இல்லை. மதத்தில், மதம் பிடித்த யானையைப் போல குருட்டுத்தனமான வெறி இருக்கும், அறிவுக்கு ஒவ்வாத வைராக்கியம் இருக்கும். இப்படிப்பட்ட மதங்கள் இன்று ஏராளம் உலகில் உண்டு ஆனால் உண்மைக் கிறிஸ்தவம் சிருஷ்டிகரை தொழுது சேவிக்கிறதேயன்றி சிருஷ்டியை தொழுது சேவிப்பதில்லை. கிறிஸ்தவம் (ஒரே) ஒரு மார்க்கம் இது மட்டுமே உலக வாழ்வின் மாயையும், மறுமையில் வரும் நித்திய நிஜ வாழ்வையும் படம் பிடித்துக் காட்டுகிறது. கிறிஸ்தவம் காட்டும் மறுமை வாழ்வில் கண்ணீர் இல்லை, கவலை இல்லை, வருத்தம் இல்லை, மரணம் இல்லை, பிறமதங்கள் மறுமைக்கு வழிகாட்டுவதாகச் சொன்னாலும், அவைகள் ஞானமென்கிற பொய்யான பெயர் பெற்று, சுய இஷ்ட ஆராதனையை செய்து, கட்டுக்கதை பின்னணிகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. இவைகளின் முடிவு ஒரு சூனியமாய், கேள்விக்குறியாய் அமைந்தது ஆகும்.

## மத மாற்றம் தேவையா?

கிறிஸ்து சொன்னார், "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6) இந்த மார்க்கம் நூற்றாண்டு காலமாக தெய்வத்தால் திட்டமிடப்பட்டு, உலகமெங்கும் உள்ள சகல மக்களுக்கும் மீட்பையும், பாவமன்னிப்பையும் அருளிச் செய்யும் மார்க்கம். இம் மார்க்கம் சமத்துவத்திற்குப் பதிலாய் சகோதரத்துவத்தை கைக்கொண்டு போதிப்பதால், ஜாதி, இனப் பாகுபாடுகளுக்கு இதில் இடமில்லை. உயர்வு, தாழ்வுகளுக்கோ, ஏழை, பணக்காரன் என்றோ, வெள்ளையன்-கருப்பன் என்றோ, கற்றவன் - கல்லாதவன் என்றோ இம்மார்க்கத்தில் (உண்மை சபையில்) வித்தியாசமில்லை, அமைதி, சமாதானம், அன்பு, பரிசுத்தம், சமூக வாழ்வு, அளிப்பது கிறிஸ்தவமே. உண்மை கிறிஸ்தவத்திற்கு உள்ளும் புறமும் அநேக எதிர்ப்புகளிருந்தாலும் இது யாரையும் எதிரியாகக் கருதுவதில்லை. (சாத்தானைத் தவிர).

தர்க்க ரீதியாக எடுத்துக் கொண்டாலும், அந்நிய நாட்டு காரல் மார்க்ஸின் தத்துவங்களையும், பிற கம்யூனிச, சோசலிஸ கோட்பாடுகளையும், மேலை நாடுகளின் பொருளாதாரம், நாகரீகம் பழக்க வழக்கங்கள், நடை, உடை, பாவனைகளையும், கிறிஸ்தவ மார்க்கத்தின் எதிர்ப்பாளர்கள் பின்பற்றுவது ஏன்? சிந்திக்க வேண்டாமா?

இதை வாசிக்கும் அருமை நண்பரே, கிறிஸ்தவம் உண்மையிலேயே ஒரு அந்நிய நாட்டு மார்க்கமல்ல. இது உங்களுக்கும் எனக்கும் உலகில் உள்ள ஒவ்வொரு தனி நபருக்கும் காட்டப்படுகிற வழி. கர்த்தர் இயேசு மறுபடியும் வருகிறார். அவருக்குள் இருப்பவர்களை மறுமைக்கு கொண்டு செல்வார். அவருக்குள் இல்லாதவர்களை ஆக்கினைக்குள்ளாக்குவார். 'தேவனை அறியாதவர்களுக்கும், அவருடைய (மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைக் கொண்ட) சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்களுக்கும், நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படிக்கு' கர்த்தர் வருவார். அவர் வருவதில் 'தாமதிக்கிறார்' என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தை குறித்து தாமதமாயிராமல், எல்லோரும் மனம் திரும்ப வேண்டும் என்று நீடிய பொறுமையோடே காத்துக் கொண்டிருக்கிறார்! (2 தெ 1:7, 2 பேதுரு 3:9) மனந்திரும்புங்கள் நண்பரே! தெய்வம் சொல்லும் வேதாகம வார்த்தைகளுக்கு செவி சாயுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள். பாவத்தை விட்டொழித்து கிறிஸ்துவை அறிக்கையிட்டு ஞானஸ்நானத்திலே அவரை ஏற்றுக் கொள்ளுங்கள்.

ஏனெனில், "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்று கிறிஸ்து சொன்னார். (மாற்கு 16:16) எனவே கிறிஸ்து உலக இரட்சகர். ஒரு நாட்டுக்கு மட்டுமோ, ஒரு இனத்துக்கு மட்டுமோ உரியவர் அல்லர். அவரிடத்தில் மனதைத் திருப்புங்கள், மதமாற்றத்தைப் பற்றி பேசமாட்டோம்.

**E.A.ஆறுமுகம்,**
**திண்டுக்கல்.**

## உதவி செய்யாமலிருப்பது என்பது ..... பாவம் :- II

உதவி செய்வதென்பது ஒரு நன்மையான காரியம் என்பதை அறிந்தோம். "நன்மை செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாமலிருப்பது பாவமாகும் ( யா 4 : 17) பாவத்தின் சம்பளம் மரணமாகும் (ரோ 6 :23) நன்மை செய்ய அறிந்தும் செய்யாமல் சரீர மரணத்தைத் தழுவிய ஒருவனைக் குறித்து 1 சாமு 25ல் பார்க்கலாம். தாவீது சவுலுக்குப் பயந்து வனாந்தரத்தில் தன் ஆட்களோடு தங்கியிருந்தான். தனக்கும், தன் ஆட்களுக்கும் புசிக்க உணவு தருமாறு, ஏற்கனவே தாவீதின் மூலம் உதவிபெற்ற நாபாலிடத்தில் ஆட்களை அனுப்புகிறான். ஆனால் நாபால் தன்னிடத்தில் உணவு இருந்தும் பசியால் வாடும் தாவீதுக்கு உணவு கொடுக்க மறுக்கிறான். நாபாலின் வேலைக்காரரில் ஒருவன் நாபாலின் மனைவி அபிகாவிடம் நடந்ததைக் கூறுகிறான். உடனே அந்த புத்திசாலி பெண் தேவையான ஆகாரத்தை தாவீதுக்கு கொடுத்து உதவுகிறாள். அதனால் தாவீது கோபம் தணிந்து நாபாலின் மேல் படையெடுப்பதை நிறுத்திவிடுகிறான். ஆனாலும் நீதியுள்ள தேவன், நன்மை செய்யாத நாபாலை அடிக்கிறார். அவன் சாகிறான், நன்மை செய்த அபிகாவை தாவீது தனக்கு மனைவியாக்கிக் கொண்டு ஆறுதல் அளிக்கிறான். பாவத்தின் சம்பளமாகிய மரணம் சரீரத்தில் மட்டுமல்ல, ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மூலதனமாய் விளங்கும் விசுவாசத்தையும் சாகடித்து விடுகிறது. "ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி; நீங்கள் சமாதானத்தோட போங்கள், குளிர்

காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும் (ஜெபம் பண்ணியும்) சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்கு கொடாவிட்டால் பிரயோசனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லா திருந்தால் தன்னில்தானே செத்ததாயிருக்கும் (யாக் 2 : 15-17) என்று வேதம் சொல்வது எவ்வளவு உண்மையாயிருக்கிறது. பாவத்தின் கொடூரத்தை அறிந்திருக்கிற நாம் நன்மையாகிய உதவியை செய்து என்றும் ஜீவனுள்ளவர்களாய் வாழ்வோம். எப்படியெனில் தொற்காள் என்ற சீஷி இறந்து விட்டாள். மற்ற சீஷர்கள் பேதுருவை வரவழைத்து தொற்காளை உயிரோடெழுப்புகிறான். தொற்காளுக்கு மீண்டும் ஜீவனைக் கொடுத்தது எது? என்று ஆராய்ந்து பார்த்தால், பேதுருவைக் கண்டதும் விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனே கூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்து அவனைச் சூழ்ந்து நின்றார்கள் என்ற இந்நிகழ்ச்சியே, பேதுரு தொற்காளை உயிரோடு எழுப்ப வைத்தது (அப்.9:36-41)

அதேபோல புற சாதியானாகிய கொர்நெலியுவும் அவனது குடும்பமும் பேதுரு மூலம் சத்தியத்தை அறியவும், பரிசுத்த ஆவியானவரைப் பெறவும், ஞானஸ்நானம் பெற்று தேவனுடைய பிள்ளையாய், நித்திய ஜீவனுக்குரியவர்களாய் மாற்றியது எது? இதோ தேவனே அதைக்குறித்து தேவதூதன் மூலம் கூறுகிறார். "உன் ஜெபங்களும், உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது" ( அப் 10:3-4) அதன் விளைவாக தேவன் பேதுருவைகொர்நெலியுவிடம் அனுப்புகிறார். எவ்வளவு அருமையான தேவன் பாருங்கள். தேவன் நமக்குச் செய்த நன்மைகள் எண்ணிலடங்காதது. ஆனாலும் நாம் செய்கின்ற ஒரு சில நன்மைகளைக் கூட தேவன் நினைவில் கொண்டு நம் ஆவிக்குரிய வாழ்க்கையைப் பலப்படுத்துகிறார். ஆம், ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்ப கொடுப்பார் (நீதி 19 : 17) அன்பான தேவ பிள்ளைகளே! இப்பொழுது நீங்கள் 'பலவீனரைத் தாங்குவது' நம் ஒவ்வொருவருடைய அனுதின கடமைகளில் ஒன்று என்றும் அதை உடனே செயலில் காட்டுவது என்றும் முடிவெடுத்திருப்பீர்கள். மிக்க நன்றி! அதே சமயம் "உங்களது நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள்" என்ற எச்சரிப்பையும் கவனத்தில் கொள்ள வேண்டும் (ரோ 14 : 16). யாருக்கு உதவி செய்ய வேண்டும்? யாருக்கு செய்யக் கூடாது? என்பதையும் அறிந்து செய்வது நல்லது.

### யாருக்கு உதவி செய்வது?

"திடனற்றவர்களைத் தேற்றுங்கள். பலவீனரைத் தாங்குங்கள் உத்தம விதவைகளுக்கு உதவி செய்ய வேண்டும் (1 தீ 5 : 16, 1 தெச 5 : 14) பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்கு (ரோ 15 : 26) பஞ்சத்தில் இருப்பவர்களுக்கு (அப் 11 :29) பரிசுத்தவான்களுடைய குறைச்சலை நிறைவாக்க (ரோம 15 : 25 -26).

### யாருக்கு உதவி செய்யக்கூடாது?

கிறிஸ்தவப் பிள்ளைகள் அனைவருமே இரக்க குணம் உடையவர்கள். நாம் அனுதினமும் சந்திக்கும் பிச்சைக்காரர்களுக்கு உதவிகள் செய்கிறோம். ஆனால் பாத்திரம் அறிந்து பிச்சையிடுகிறோமா? உடல் ஊனமுற்றவர்களுக்கு, வேலை செய்து கூலி பெற்று சாப்பிட முடியாதவர்களுக்கு உதவி செய்வது நியாயம். நல்ல உடல் கட்டோடு இருக்கும் "சாமியார் பிச்சைக்காரர்களுக்கும், படிக்க வேண்டிய அல்லது பெற்றோரால் போஷிக்கப்பட வேண்டிய சிறு பிள்ளைகளுக்கும் பிச்சையிடுவது, எந்த வகையில் நியாயம்? அவர்களது சோம்பல் புத்திக்கு இரக்கம் என்ற நீர் பாய்ச்சி வளர்ப்பது நம்முடைய தவறலவா? இதைத்தான் வேதம் கடுமையாக சாடுகிறது. "ஒருவன் வேலை செய்ய மனமில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது" (2 தெச 3 :10) இது மேற்காணும் நபர்களுக்கு மட்டுமல்ல, நம் வீடுகளிலும் ஒரு வேலையும் செய்ய மனமில்லாமல், சோம்பித்திரியும் நமது வாலிப பிள்ளைகளுக்கும் ஏற்ற ஆலோசனையாகும். ஆகவே வேலை செய்ய முடிந்தும் மனமில்லாத யாருக்கும் உதவி செய்யக் கூடாது. இது தேவ கட்டளை.

"ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தை கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான் (2 யோ 10,11) இவ்வசனங்கள் நமக்கு எதை நினைவூட்டுகிறது? நமது வீடுகளுக்கு வேதாகமத்தை தூக்கிக் கொண்டு, இயேசுக் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ் செய்யும் (ரோ 16 : 18) வஞ்சகர்களும் நாம் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய் பிரிவினைகளையும் உடறல்களையும் உண்டாக்கும் (ரோ 16:17) கள்ளப் போதகர்களையும் அல்லவா? ஆகவே அப்படிப்பட்ட கள்ளப் போதகர்களுக்கு உதவி செய்யக் கூடாது.

உதவி செய்ய மூலதனம் நம்முடைய மனமேயாகும். நாம் நம் சொந்தக் கைகளினால் வேலை செய்து (1 தெச 4: 12) கிடைக்கும்

வருமானத்தில் உதவி செய்வதற்கென்றே சேர்த்து வைத்து (2 கொரி 6 : 12) உதாரத்துவமாய் (2 கொரி 8 : 2) உற்சாகமாய் (2 கொரி 9 : 7) மனப்பூர்வமாய் கொடுத்து உதவி செய்ய வேண்டும். உதவி செய்ய என்னிடத்தில் என்ன இருக்கிறது? என்று யோசிக்க வேண்டாம். நாம் செய்ய முடியாத ஒன்றை கர்த்தர் நமக்குக் கட்டளையாகக் கொடுக்கமாட்டார். தனக்குமிஞ்சியே தானதர்மங்கள் என்பது கிறிஸ்தவர்களாகிய நமக்கு பொறுத்தமானதன்று. அதற்கு இதோ ஒரு உதாரணம். மக்கெதொனியா சபையார் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோசத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள் (2 கொ 8:2) தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க மனதுள்ளவர்களாயிருந்தார்கள் (2 கொ 8 : 3) இதுவே தேவனின் சித்தத்தை நிறைவேற்றுகிற பண்பாகும். திருடியோ, கடன் வாங்கியோ உதவி செய்வதல்ல. குறைச்சலுள்ளவர்களுக்கு கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்ய வேண்டும் (எபே 5 : 28) நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று மனம் வைத்தால்"விதைக்கிறவனுக்கு விதையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர், உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப் பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார். ஆம் கர்த்தர் உங்களுக்கு கொடுப்பார்.

பலவீனரின் பலவீனங்களை, உங்கள் பொருளால், உடல் உழைப்பால் ஜெபத்தால், ஆறுதல் வார்த்தைகளால், அல்லது பிறர் மூலமாவது என ஏதாவது ஒரு நல்ல வழியில் தாங்குங்கள். அவர்களுடைய உள்ளங்களில் இளைப்பாறுதலை அளியுங்கள். இப்படி நன்மை செய்வதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம் (கலா 6:) நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது, அதைச் செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே (நீதி 27) நம் அந்நிய காலத்தில் நாம் ஞானமுள்ளவர்களாயிருக்கும்படி, ஆலோசனையைக் கேட்டு, புத்திமதியை ஏற்றுக் கொள்வோம் (நீதி 19 :20)

**கே.எம்.பிலிப்**
**சிறுவலூர்.**

# வெளிப்படுத்தின விசேஷம்

பரிசுத்த வேதாகமத்தின் இறுதி நூலாகிய வெளிப்படுத்தின விசேஷத்தைப் படித்துப் புரிந்து கொள்வதில் அநேகருக்கு பெரும் சிரமம் உண்டு. இந்நூலின் பெரும்பகுதி உருவக அணியில் எழுதப் பட்டுள்ளபடியால், சரியான கோணத்தில் புரிந்து கொள்ள முடியாமல், இப்புத்தகத்தைப் படிப்பதையே கூட அநேகர் கைவிட்டு விடுகின்றனர். படிக்க முற்படும் சிலரும், யாருக்காக இப்புத்தகம் எழுதப்பட்டது என்றும், எந்தச் சூழ்நிலையில் இந்த முக்கியமான செய்தி தேவனால் வெளிப்படுத்தப் பட்டது என்றும் மனதில் கொள்வதில்லை.

ஏற்கனவே ஒருமுறை செய்தியைப் பெற்றுக் கொண்ட வர்களுக்கு மறைபொருளுள்ள அர்த்தத்தோடு சொல்லப்பட்டவை களைப் புரிந்து கொண்டவர் களுக்கு, வெளிப்படுத்தின விசேஷத்தின் மூலம், மீண்டும் சங்கேத மொழியில் சொல்லப் பட்ட காரியங்களைப் புரிந்து கொள்வதில் சிரமம் இருந் திருக்காது. ஆனால் இன்றோ, இந்நூல் பெரும்பாலான பிரசங்கிகளால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, அவர்களைப் பின்பற்றுவோருக்கு மோசமாகப் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. ஆம் உணர்ச்சியைத் தட்டி எழுப்பக் கூடிய அநேக போதனைகள், கள்ளப் போதகர்களால் போதிக்க ப்பட்டு, திரளான மக்கள் தவறாக வழி நடத்தப்படு கின்றனர்.

இந்நூலின் முதல் பக்கமே ஓர் உண்மையை நமக்கு தெளிவாக வெளிப்படுத்துகிறது. தாங்கள் ஏற்றுக் கொண்ட உண்மையான சத்தியத்தைக் கைவிட மறுத்த, ஒரே காரணத்திற்காக கொலை, கொள்ளை, நாடு கடத்துதல் போன்ற நிறைந்த கொடுமைகளுக்கு ஆட்பட்டிருந்த, ஏழு ஆசியத் திருச்சபைகளுக்கு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அல்லல் பட்டுக் கொண்டிருந்த ஆண்டவரின் பிள்ளைகளுக்கு நம்பிக்கையையும், தைரியத்தையும் ஏற்படுத்துவதே நூலின் பிரதான நோக்கம். வெளிப்படுத்தப்பட்ட செய்தி, இந்த ஏழு சபைகளுக்கு மாத்திரம் சொல்லப்படவில்லை. ஏனெனில் எண் “ஏழு” என்பது முழுமைக்கும், பரிபூரணத்திற்கும் அடையாளமாக வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆசியாவிலிருந்த இந்த ஏழு சபைகளும் மற்றெல்லாச் சபைகளுக்கும் முன்னோடியாக, பிரதிநிதியாக இருக்கும்படியாகக் கர்த்தரால் தெரிந்து கொள்ளப் பட்டவை. ஏனெனில் இந்த ஏழு சபைகளுக்குள்ளாக இருந்த நிலைமைதான், அவைகளின் பிரதிபலிப்பு தான், வரப்போகும் எல்லாக் கிறிஸ்துவின் சபை களிலும் இருக்கப் போகின்றவை.

வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள செய்தி, பிரதானமாக இந்த ஏழு சபைகளுக்குத் தான் என்பதில் துளியும் சந்தேகமில்லை. இருப்பினும் எங்கும், எக்காலத்திலும் வாழும் தேவப் பிள்ளைகளுக்கும் பொருந்தும் படியாகவே சொல்லப்பட்டுள்ளன.

டொமிசியன் என்ற சக்கரவர்த்தி, தான் ரோமப் பேரரசனாக இருந்த நாட்களில் கட்டாய "ராஜ வணக்கத்தை" அறிமுகப்படுத்தியிருந்தான். சாம்ராஜ்யமெங்கும் தன்னுடைய உருவச் சிலையை நிறுவி, எங்குமுள்ள மக்கள் சிரமமின்றி சிலை வணக்கம் செய்ய ஏற்பாடு செய்திருந்தான். அவனை வணங்க வேண்டும் என்பது ஒரு கட்டாயச் சட்டம். அவனுக்காக அமைக்கப்பட்டிருந்த பலிபீடத் திற்கு முன்பாக, ஒவ்வொரு குடிமகனும் தூபம் காட்ட வேண்டும். அப்படிச் செய்யும் பொழுது, குடிமகனுக்கு தன்னுடைய மதக்கடமையை நிறைவேற்றியதாக சான்றிதழ் வழங்கப்படும். ஒவ்வொரு ரோமப் பிரஜையும் கட்டாயம் இந்தக் கடமையைச் செய்து, சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும். சான்றிதழ் பெறாதவன், சக்கர வர்த்தியை எதிர்க்கிறவனாக, சட்டத்திற்கு புறம்பானவனாகக் கருதப்பட்டான்.

இந்தப் பின்னணியில், ரோமாபுரியில், ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பது எவ்வளவு சிரமமும், சோதனையும் நிறைந்தது என்பதை நிதானிக்க முடியும். சக்கரவர்த்தி மீது தங்களுக்கிருந்த பக்தியைத் தெரிவிக்க ஒவ்வொரு கிறிஸ்தவனும் தூபங்காட்டி, பின் "இராயனே கர்த்தர்" என்று வாய் திறந்து சொல்ல வேண்டும். ஆனால், எந்தவொரு உண்மைக் கிறிஸ்தவனும் அப்படிச் சொல்லவே மாட்டான். ஏனெனில், அவர்களின் ஒரே கர்த்தர் இயேசுக்கிறிஸ்து மட்டுமே. அவர்கள் கர்த்தரின் நாமத்தை எந்தவொரு மனிதனுக்கும் தரமாட்டார்கள் (மத் : 10:32, 33) சக்கரவர்த்தியின் ஆராதனை முறைக்கு கிறிஸ்தவர்கள் மறுப்பும் எதிர்ப்பும் தெரிவித்தனர். தங்களின் இந்த உறுதியான முடிவால் பேரரசனின் சட்டத்தை மீறிய கடும் குற்றவாளிகளானார்கள். அந்நாட்களில் அதன் விளைவைச் சொல்லவும் வேண்டுமா? கிறிஸ்தவர்கள் சிறையிலிடப்பட்டார்கள். அடித்து நொறுக்கப்பட்டார்கள். துன்புறுத்தப்பட்டார்கள். இன்னும் பல கொடுமைகளுக்கு ஆட்படுத்தப்பட்டு இறுதியில் மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப் பட்டார்கள்.

அந்நாட்களில், கர்த்தரை உறுதியாய்ப் பின்பற்றினவர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் தான் கீழ்வரும் வசனம். "நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே இதோ நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான், பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் மரணம் பரியந்தம் உண்மை

யாயிரு. அப்பொழுது ஜீவக் கிரீடத்தை உனக்குத் தருவேன் (வெளி 2:10) அதாவது மரணம் கூட அவர்களின் விசுவாச உறுதிப்பாட்டை நிலைகுலையச் செய்யக் கூடாது. இறுதி வெற்றி அவர்களுடையதே என்பது தான். அப்பொழுது அவர்கள் வாடாத ஜீவ கிரீடத்தை, நித்திய ஜீவனை பரலோகத்தில் பெற்றுக் கொள்வார்கள். அங்கே கண்ணீர் இல்லை, மரணம் இல்லை, துக்கமில்லை, அலறுதல் இல்லை, வருத்தமில்லை (வெளி 21:4) ஆனால், கிறிஸ்தவர்களின் விரோதிகளும், அவரைத் துன்பப் படுத்தினவர்களுமோ அக்கினியும், கந்தகமுமான கடலில் தள்ளப் படுவார்கள் (வெளி 20 : 10, 21 :8).

இதுதான் யோவானின் நாட்களில், கடுமையான அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கு அடையாளமாக வெளிப்படுத்தப்பட்ட செய்தியாகும். கிறிஸ்தவர்கள் தங்களுக்கு நேரிடும் எப்படிப்பட்ட உபத்திரவத்தைக் குறித்தும் கலங்க வேண்டியதில்லை. உலகத்தின் மீது நித்திய வெற்றியை இயேசுக் கிறிஸ்து பெறுவார் என்று சொல்வதே, பரிசுத்த ஆவியானவர், யோவானின் மூலம் வெளிப்படுத்தும் செய்தியாகும். அவன் நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, கிறிஸ்துவின் வருகைமட்டுமுள்ள கிறிஸ்தவர்களுக்கும் இதுதான் செய்தி. ஆம், இயேசுககிறிஸ்து விரைவில் தன்னுடைய பிள்ளைகளை எல்லா இக்கட்டுகளிலிருந்தும் மீட்டுக் கொள்ள வருகிறார். எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை.

முதல் நூற்றாண்டுக் காலத்தில் ஆசியாவிலிருந்த இந்தச் சபைகளையும், அதின் நிலைமைகளையும் மனதில் கொண்டு இந் நூலைப் படித்து வியாக்கியானம் செய்தால் தான் அது சரியான அணுகுமுறையாக இருக்கும்.

அன்று, அவர்கள் துன் புறுத்தப்பட்டார்கள். பயமுறுத்தப் பட்டார்கள், கொல்லப்பட்டார்கள். அவர்களுக்கு நம்பிக்கையும், தைரியத்தையும் ஊட்டக்கூடிய செய்தி அவசியமாயிருந்தது. ஆகவே தேவன் இந்த வெளிப்பாட்டின் மூலமாக தைரியத்தையும், ஆறுதலையும், தன்னுடைய பிள்ளைகளுக்குத் தந்தார். தன்னுடைய விரோதிகள், எதிரிகள் யாரையும் தேவனால் வெற்றி காண முடியும் என்று நமக்கு அறுதியிட்டுச் சொல்கிறது இந்நூல். தேவனுக்கு எதிராக எந்தச் சக்தியும் நிற்க முடியாது. அவருடைய பிள்ளைகள் அவருடைய சித்தத்தின்படி செய்வதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்தவும் முடியாது. அவர் எல்லாவற்றையும் தன் முழு அதிகாரத்தின் கீழ் வைத்துள்ளார். இந்த வெளிப்படுத்தின விசேஷம், உண்மையாகவே தேவனுடைய சித்தத்தை ஏற்றுக் கொண்டு அதின்படி செய்கிற மக்களுக்கும், அவருக்குக் கீழ்படியாத மக்களுக்கும் ஒரு தெளிவான செய்தியை வெளிப்படுத்துகிறது.

சன்னிடேவிட்.
டெல்லி

# ஒரு முடிவுக்கு வாருங்கள்

"என்னோட இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்" (மத் : 12 :30) என்றார் இயேசு கிறிஸ்து. சத்தியத்திற்கும் நேர்மைக்குமான போராட்டத்தில் நடுநிலைமை என்று ஒன்று கிடையாது. கிறிஸ்துவுக்கும், சாத்தானுக்கும் ஒரே சமயத்தில் ஊழியஞ் செய்ய இயலாது. பலர் இக்காரியத்தில், பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலும் காட்டும் விலாங்கு மீனைப்போல, இரட்டை வேடம் போட முயலுகின்றனர். சபையில் ஏற்பட்ட ஒரு பிரச்சனை பற்றி, ஒரு போதகரின் முடிவைக் கேட்டபோது, அவர் கூறினார்! "என்னுடைய நண்பர்களில் பாதிப்பேர் பிரச்சினையை ஆதரிக்கின்றனர்; மீதிப்பேர் எதிர்க்கின்றனர்; நானோ அவர்கள் எல்லோரையும் அரவணைத்துக் கொண்டு செல்லுகிறேன்", நிச்சயமாக, அவர் கிண்டலாகத்தான் அவ்வாறு கூறினார் என்ற போதிலும், நம்மில் அநேகருடைய இன்றைய நிலையைத்தான் இது பிரதிபலிக்கிறது.

ஒரு வேளை, நமது நண்பர்கள் சிலரின் உணர்வுகளை பாதித்து விடக் கூடாதே என பயப்படுகிறோமோ? "ஒரு போதும் ஒருவரையும் கண்டிக்காத ஒருவன், எவருக்கும் எப்போதாவாது எந்த நன்மையையும் செய்திருக்கமாட்டான்" என டயாகினஸ் என்பவர் கூறினார். பிறர் தவறுகளை கண்டித்து விடக்கூடாது என்பதில் சில வேளைகளில் நாம் மிகவும் கண்டிப்பாக இருக்கிறோம்! கெடுதல்களை சந்தித்த இடங்களில் எல்லாம், யோவான் ஸ்நானகன் கண்டிக்கத் தயங்கியதே கிடையாது. நாம் எந்த பக்கத்தில் இருக்கிறோம் என்ற சந்தேகம் ஒரு போதும் அவருக்கு ஏற்பட்டதில்லை. ஏரோதின் இரண்டாவது மனைவியைப் பற்றிக் கேட்டபோது, யோவான் மழுப்பலான பதிலைக் கூறவில்லை. மாறாக தவறைக் கண்டித்தார். நேரிடையான கண்டிப்பு தேவைப்படும் பல சந்தர்ப்பங்களில், சாந்தமான அடக்க குணத்தால் கேடு விளைவதை நான் அறிவேன்.

நமது நிலைப்பாடுகளைத் தெளிவாக, மறைவின்றி கூறி விடுவது அவசியம். எந்தப் பிரட்சனை பற்றிய தனது கருத்தையும் ஒரு அஞ்சல் அட்டையின் பின்புறத்தில் எழுதியது போக, மீதி இடத்தில் அவர்கள் நலனையும் விசாரித்து எழுத இடமிருக்கும் என்றார் காலஞ்சென்ற N.B.ஹார்ட்மேன். சில மாதங்களுக்கு முன்பு, அமெரிக்க செனட் சபையில் ஒரு பிரபல உறுப்பினர் பேசுவதை அரைமணி நேரம் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் பேச்சு எந்த பக்கத்தைச் சார்ந்துள்ளது என உன்னிப்பாகக் கவனித்து வந்தேன். கடைசியாக அருகில் நின்று கொண்டிருந்த தலைமைக் காவலரைப் பார்த்து இந்த

உறுப்பினர் யாருக்காக பேசிக் கொண்டிருக்கிறார் என்று கேட்டேன். அவர் பதிலளித்தார்; நானும் இன்று முழுக்க இவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். என்றாலும் எந்தக் கட்சிக்காக இவர் பேசிக்கொண்டிருக்கிறார் என இன்னும் எனக்குத் தெரியவில்லை!

தற்காலத்தில் பல போதகர்கள் ஒரு காரியத்தில் தங்கள் தீர்மானமான முடிவைத் தெரிவிக்கும் முன்னர், காற்று எந்தப் பக்கம் அதிகமாக வீசுகிறது என்பதைக் கவனித்துக் கொண்டு, மெஜாரிட்டி முடிவை தங்கள் முடிவாக அறிவித்து விடுவார்கள். இது, உள் நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்த போது, நாட்டின் எல்லைப் பகுதியில் வசித்த ஒரு மனிதனின் கதையை நினைப்பூட்டுகிறது. வடக்குப் பகுதியை பகைக்க விரும்பாத காரணத்தால் அம்மனிதன் நீல வண்ணத்தில் கோட்டு அணிந்து கொண்டான். தென் பகுதி மக்களின் பகையையும் அவன் விரும்பாததால், சாம்பல் நிற கால்சராய் அணிந்து கொண்டான். ஒரே ஒரு பிரச்சனை என்னவென்றால், வடக்கத்தியர் அவன் கால் சட்டையைக் கண்டு அதை நோக்கிச் சுட்டனர்; தெற்கத்தியரோ நீலக் கோட்டை நோக்கி சுட்டனர். ஆக மொத்தத்தில் இரண்டு குண்டுகளை உடம்பில் வாங்கிக் கொண்ட அம்மனிதன் அங்கேயே மடிந்துவிழுந்தார். ஒரு முடிவை எடுக்க முடியாதவர்கள் எதற்கும் லாயக்கற்ற மனிதர்கள்.

Bobby Key — **எஸ்.எஸ்.ராஜன்.**

## நியாயமான மன்றாட்டு

இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன். நான் மரிக்கும் பரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும்.

மாயயையும் பொய் வசனிப்பையும் எனக்கு தூரப்படுத்தும். தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குத் கொடாதிருப்பீராக.

நான் பரிபூரணம் அடைகிறதினால், மறுதலித்து கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால், திருடி என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னை போஷித்தருளும்.

# 5 + 5 = 5

"அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்து பேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்" - மத்தேயு 25 : 2

எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டியதின் அவசியத்தை நமக்கு வலியுறுத்திக் கூறும் ஒரு பாடத்தை அந்த பத்து கன்னிகைகளின் உவமை கற்பிக்கிறது. ஐந்து புத்தியற்ற கன்னிகைகள் திருமண விழாவில் கலந்து கொள்ள முற்றிலும் தயாராக இருக்கவில்லை. எனவே மணவாளன் வரும்போது அவர்களை உள்ளே அனுமதிக்க மறுத்து, கதவு சாத்தப்பட்டது. எனவே புத்தியுள்ள அந்த ஐந்து கன்னிகைகள் மட்டுமே மணவாளனோடு உட்பிரேவசித்தார்கள்.

புத்தியுள்ளவர்களுக்கும், புத்தியற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் தான் என்ன? இரு சாராருமே விளக்குகள் வைத்திருந்தனர்; மணவாளனின் வரவை இரு குழுக்களுமே எதிர் நோக்கியிருந்தனர்; திருமணத்தில் இருவருமே தங்கள் பங்கை எதிர்பார்த்திருந்தனர்; தங்கள் விருப்பத்தில் இருவருமே நேர்மையாக இருந்தனர்; மணவாளனின் வரவை எதிர்நோக்கும் வேளையிலும் இருவரும் நம்பிக்கையுடனே தான் நித்திரைக்குச் சென்றனர்; மணவாளனின் வருகை பற்றிய செய்தியைக் கேள்விப்பட்ட வேளையில் இருசாராரும் தங்கள் விளக்குகளை ஏற்றினர். ஆகு இருவருக்கும் இடையே இங்கு உள்ள பெரிய வித்தியாசம் தான் எது? ஒரு சாரார் மணவாளனின் வருகைக்காக தயாராக இருக்கத் தவறி விட்டதாலேயே அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

மேலே கண்ட உவமையில் குறிப்பிடப்பட்ட பகுதி, நியாயத்தீர்ப்பு என்னும் நிகழ்ச்சி. தேவனுடன் இணைந்திருக்கு நியாயத்தீர்ப்பை ஆவலுடன் எதிர் நோக்கி காத்துக் கொண்டிருக்கும் பல நாணயமானவர்கள், நீதிமான்கள், ஆவிக்குரிய மக்களை நோக்கி, "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை . . . . என்னை விட்டு அகன்று போங்கள்" (மத்:7:23) என கர்த்தர் கூறும் போது, அவர்கள் அழிவை நோக்கிச் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றனர். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி" (வ.21) செய்யாததே இம்மக்களின் நிராகரிப்புக்குக் காரணம்.

அந்த புத்தியற்ற 5 கன்னிகைகளுக்கு நிகரான, நிறைய நண்பர்களை, குடும்பங்களை, நமக்கு வேண்டியவர்களை

நாம் அறிவோம். ஒருவர் விரும்பும் அன்பும், ஆவிக்குரியத் தன்மையும் உடையவர்களாக இவர்கள் இருக்கின்றனர். நியாய வான்களாகவும், பிறருக்கு உதவுவோராகவும், பிறரை நேசிப்பவர்களாககவும் கருணை உள்ளம் படைத்தவர்களாகவும், உபசரிப்பவர்களாகவும், நல்ல மணப்பாங்குடையவர்களாகவும் இருக்கின்றனர். மரணத்திற்குப்பின் பரலோகம் செல்ல இவ்வுலக காரியங்கள் பலவற்றை உதறித்தள்ள தயாராக இருக்கின்றனர். அப்படியானால் தடை என்ன? தேவன் விரும்பும் தயார் நிலையில் அவர்கள் இல்லை; "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப் படுவான்" என வேதாகமம் கூறும் போது, "விசுவாசமுள்ளவன் இரட்சிக்கப்படுவான்" என்று அர்த்தம் அல்ல. புத்தியற்ற கன்னிகைகளைப் போல, அவர்களுக்கும் இரட்சிப்புக்கும் இடையில் உள்ள ஒரு சிறு காரியத்தை தவற விட்டு விட்டனர்.

கர்த்தர் கட்டளையிடுவதை செய்வது தேவை அல்லவா? மீண்டும் ஒரு நாளுக்காக ஏன் காத்திருக்கிறீர்கள்? ரோமர் 6 : 3 -6 வசனங்களில் கூறப்பட்டபடி வேதாகமத்திற்குக் கீழ்ப்படிந்து, மணவாளன் மீண்டும் வருவதற்கு முன்பாக, இன்றே இரட்சிப் படைவீர்.

**எட்டீ விட்டன்**

## புதிய ஏற்பாட்டில் சபை என்பது கீழ்க்காணும் மறு பெயர்களையும் கொண்டது.

| | |
|---|---|
| **தேவனுடைய ஆலயம்** | **I கொரி. 3 : 16** |
| **கிறிஸ்துவின் மணவாட்டி** | **எபே. 5 : 21 -32** |
| **கிறிஸ்துவின் சரீரம்** | **கொலோ 1:24, எபே.1:22,23** |
| **தேவனுடைய ராஜ்யம்** | **கொலோ .1:13** |
| **தேவனுடைய வீடு** | **I தீமோத் 3: 15** |
| **முதற்பேறானவர்களின் சங்கம்** | **எபி 12:23** |
| **கிறிஸ்துவின் சபை** | **ரோம. 16:16** |

# உங்கள் சிறு குழந்தைகளை சபைக்கு அழைத்து வாருங்கள்

சிறு குழந்தைகளை வைத்துள்ள பெற்றோர்களை இங்கு நான் நினைவு கூறுகிறேன். முதலாவதாக, எவ்வாறான பிரச்சனைகளையெல்லாம் அவர்கள் எதிர்நோக்க வேண்டி வரும் என்பது எனக்குத் தெரியும் (என் மனைவிக்கு இன்னும் அதிகமாகத் தெரியும்) நடைபயிலும் அந்த சிறு குழந்தைக்குப் பயிற்சி அளிப்பது ஒரு தொடர் பணி, விடா யுத்தம், வாரத்தின் ஏழு நாட்களையும் விழுங்கும் வேலை, எல்லாவற்றுக்கும் மேலாக, பீதியடையச் செய்யும் ஒரு பெரும் பொறுப்பு என்று சொல்லத் தேவையில்லை. ஆறு நாட்கள் அவர்கள் வீட்டிலே அடிக்கும் லூட்டியும், கடைத் தெருவில் மூன்று மணி நேர காலம் காணாது என்று, சில சிறு வயது தாய்மார்கள் சபையின் கூட்டத்தில் ஒரு மணி நேரம் சந்திக்க வேண்டியிருப்பது கவலையும், அவமானமும் தான்.

"ஏன் இவர்களை சபைக் கூட்டத்திற்கு அழைத்து வந்தேன்?" என்பதே பல இளந் தாய்மார்களின் கேள்வியாக இருக்கிறது. சபைக் கட்டடத்திற்குள் நுழைந்ததும், மனதிற்குள் சிறு ஜெபம் செய்கிறாள் அந்த தாய். அதாவது, குழந்தை குறும்பு செய்யாமல் இருக்க வேண்டும்; பிரசங்கமும் சுருக்கமாக அமைய வேண்டும் இதுதான் அந்த தாயின் ஜெபம். இந்த வேளையில் ஆராதனையும் ஆரம்பமாகிறது. அங்குமிங்கும் வீசியடித்த பொம்மைகளை சேகரிப்பது, குழந்தையின் அழுகையை நிறுத்த முயற்சிப்பது, வடிகிற மூக்கை சீந்துவது, திட்டுவது, வெளியில் போவதும், உள்ளே வருவதும், இத்தோடு பாடல், ஜெபம் இவற்றிலும் கலந்து கொண்டு, பிரசங்கத்தைக் கேட்க அந்த சிறு குழந்தையின் தாய் முயற்சிக்கும் வேளையில், குழந்தை தன் ஆடை முழுவதும் புட்டிப்பாலைக் கொட்டி விட்டு, கர்த்தரின் பந்தி ஆரம்பித்து நடந்து கொண்டிருக்கும்போது, அப்பத்தைக் கொடுத்துக் கொண்டு வரும் சகோதரனின் சட்டையிலிருந்து ஒரு பொத்தானை கீழே இழுத்துப்போட்டு விட்டு சிரித்துக் கொண்டு நிற்கிறது. குழந்தைக்கு ஆராதனை நேரம் கிளுகிளுப்பூட்டும் ஒரு அனுபவம். பாடல் புத்தகங்களும் பொம்மைகளும் பறக்கும் தட்டுகளைப் போல பறந்து போய், சிலருடைய தலைகளையும் பதம் பார்க்கின்றன. காணிக்கைத் தட்டு சில வேளைகளில் குழந்தைகக்கு தொப்பியாக பயன்படுகிறது!

சிந்தனையை சிதறடிக்கும் இத்தகைய காரியங்கள் வாலிபத் தம்பதிகள் பலருக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. அதுமட்டுமல்லாமல் பிறருக்கு ஏற்படும் சங்கடத்தைப் பற்றியும்

இவர்களுக்கு எந்தக் கவலையும் ஏற்படுவதில்லை. தங்கள் குழந்தைகளை முற்றிலும் 'நிறைவாக' வளர்த்ததாக எண்ணிக்கொள்வோர், இவர்களை ஏளனமாக உற்றுப் பார்க்கின்றனர். இவர்கள் தலைகளைத் தாழ்த்தி தங்களையே பார்ப்பதாக இருந்தால், என்ன நினைப்பார்கள்? "ஓ! இந்த வயதில் என்னுடைய குழந்தைகள் இருந்தபோது, எவ்வளவு அமைதியாகவும் ஒரே இடத்திலும் அமர்ந்திருந்து பெரியவர்களை, ஆராதனையில் பராக்கு ஏற்படாதவாறு நடந்து கொண்டார்களே, இவ்வாறு அவர்கள் நினைப்பதாகத்தான் கருத வேண்டியுள்ளது.

இளம் பெற்றோர்களே! கீழ்க்கண்ட ஆறு காரியங்களை மனதில் இருத்திக் கொள்ளுங்கள்:

1. நீங்கள் நினைக்கிற அளவிற்கு, உங்கள் குழந்தைகள் பிறருக்கு இடைஞ்சலாக இருப்பதில்லை.

2. சிறு குழந்தைகள் அற்ற சகோதர, சகோதரிகள் பின் பகுதியில் அமர தீர்மானித்தால் (அங்கே அநேக சிறு குழந்தைகள் உட்காருகின்றனர்) இடைஞ்சலை வரவேற்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

3. உங்கள் நிலையை பலரும் புரிந்து கொள்வர். ஏனெனில் அவர்களுடைய சிறு குழந்தைகளையும் முன்னர் சபைக்கு கொண்டு வந்திருப்பார்களே!

4. நல்லொழுக்கத்திலும், குழந்தைகளாக இருக்கையில் அளிக்கும் பயிற்சியிலும் குழந்தைகளை பழக்கினால், விரைவில் சரியான நடத்தைக்கு வந்து விடுவர்.

5. நீங்களும் உங்களுடைய குழந்தைகளும் ஆராதனைக்குத் தேவை என்பதை உணருங்கள்.

6. இன்று எழுதுகோலை எடுத்து எறியும் கரங்கள், ஒரு நாள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் விதைகளை பல இடங்களுக்கும் விதைக்க ஆர்வமாக செல்லும் என்பதில் நம்பிக்கை வைத்து செயல்படுங்கள்.

**தமிழில் : எஸ்.எஸ்.ராஜன்.**

**வேதாகமத்தில் சபை உறுப்பினர்கள் பின்வரும் பெயர்களால் அழைக்கப்பட்டார்கள்:**

| | |
|---|---|
| அங்கத்தினர்கள் | I கொரி 12 : 27 |
| சீஷர்கள் | அப். 6 : 1 |
| விசுவாசிகள் | அப் 5 : 14, 6 : 15 |
| பரிசுத்தவான்கள் | அப். 9:13, ரோமர் 1:7 |
| ஆசாரியர்கள் | I பேது. 2:9, வெளி. 1: 16 |
| கிறிஸ்தவர்கள் | அப். 11:26, 26:28,28, Iபேது. 4:16 |

**வேத வசனங்கள் அடங்கிய நாட்காட்டி**

பார்த்தவர்கள் பாராட்டுகிறார்கள்!
விசுவாசிகள் விரும்புகிறார்கள்!!

ஆம், ஆப்செட் முறையில், 6 தாள்களுடன்
பல வண்ணங்களில் அச்சடிக்கப்பட்டுள்ளது.

விலை ரூபாய் : 7/= மட்டுமே
(தபால் செலவு உட்பட)

வேண்டுவோர் தொடர்பு கொள்க.

BRO.D.STANELEY JONES
11, Kandan Street
Perambur, Madras - 600 011.

YOUR ATTENTION PLEASE

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH**

The voice of Truth-Speaker: J.C. Choate,
The Voice of Truth, Post Box 3815, New Delhi-110 049
Fridays - 7:45 to 8:00 P.M.

**HINDI**

Satya Susamachar-Speaker: Sunny David.
Satya Susamachar, Post Box 3815, New Delhi-110 004
Tuesdays - 9:00 to 9:15 P.M.
Fridays - 9:00 to 9:15

**TELUGU**

The Voice of Truth-Speaker; Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinda 533 001

Tuesdays - 2:00 to 2:15 P.M.
Thursdays - 2:15 to 2:30 P.M.
Fridays- 2:15 to 2:30 P.M.

**TAMIL**

The Way of Truth-Speaker: P.R. Swamy.
The Way of Truth, Post Box 8405, Bangalore 560 084
Sundays - 6:45 to 7:00 P.M.
Thursdays - 6:45 to 7:00 P.M.

**MALAYALAM**

The Voice of Truth-Speaker: P.K. Varghese
Church of Christ, Sunny Meads Lane, Trivandrum-34 (Kerala)
Fridays - 3:15 to 3:30 P.M.

**KANNADA**

The Voice of Truth-Speaker: Robert Rathnakar
Box 448, Bangalore 560 004
Sundays - 1:45 to 2:00

ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the address listed. Also the radio sermons are available in book form.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted at Erode HPO on 20, February, 1994
FEB 1994, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 MM, ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க

**E.Z.S. ராஜநாயகம்**

கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,

காங்கயம் 638 701

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode.
Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK POST

To

If undelivered Please return to

The Editor

**THIRUMARAI AASAAN**

POST BOX No: 27, KANGAYAM - 638 701